(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 454.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 மே 19, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4824/ '14

1.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை தரைப்படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் தரைப்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை தரைப்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அவ்விசாரணையின் பெறுபேறு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5580/ '14

2.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவர்கள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பு இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(iii) இது திருத்தியமைக்கப்படவில்லை எனின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5943/ '15

3.

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 06/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர், அமைச்சரவை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர், பிரதி அமைச்சர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், கருத்திட்ட அமைச்சர், மாவட்ட மற்றும் இராஜாங்க அமைச்சர், அமைச்சரவை அமைச்சு செயலாளர், மாகாண சபையின் பிரதான செயலாளர், திறைசேரியின் பிரதி செயலாளர் ஆகிய பதவி வகிப்பவர்களின் செயலாளர்களுக்கு ஓய்வூதியத்திற்கான உரிமை உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான அமைச்சரவை நிருபம் மற்றும் மேற்படி ஓய்வூதியம் தொடர்பாக தற்போது செல்லுபடியாகவுள்ள அனைத்து சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்பொன்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பாரா,

(ii) தற்போது மேலே குறிப்பிடப்பட்ட ஓய்வூதிய நலன்களை பெறுபவர்களின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6034/ '15

4.

கௌரவ விஜித ஹேரத்,—சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம் 2006-2011 வரையான காலப் பகுதிக்காக நியமிக்கப்பட்டிருந்த ஹோமியோபதி மருத்துவப் பேரவையானது அரசியலமைப்பின் 12 மற்றும் 14 ஆம் உறுப்புரைகளுக்கு முரணாக 2009.10.29. ஆம் திகதி கலைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக 2006 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட மருத்துவப் பேரவை அங்கத்தவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) கலைக்கப்பட்ட மருத்துவப் பேரவைக்குப் பதிலாக அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் சட்டபூர்வமற்ற இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தை அங்கீகரிக்கின்றாரா;

(ii) மேற்படி இடைக்கால குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் 184 தொடக்கம் 275 வரையான மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டதன் ஊடாக ஹோமியோபதி சட்டம் மீறப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நியமனங்களை இரத்துச் செய்வாரா;

(iv) இரத்துச் செய்யும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹோமியோபதி சட்டத்தின் 20 வது பிரிவின் கீழ் பதிவாளரொருவரை நியமிக்க மருத்துவப் பேரவையொன்றுக்கு மாத்திரம் உரித்தான தத்துவத்தை மீறி அப்போது நிலவிய சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரால் திரு. எம். ஏ. பெரேரா பதிவாளராக நியமிக்கப்பட்டமை சட்டபூர்வமானதா;

(ii) இன்றேல், மேற்படி நியமனத்தை சரிசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6039/ '15

5.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 2015 தயட்ட கிருள வேலைத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்துக்கான வீடமைப்பு உதவி வேலைத்திட்டத்திற்கு அமைய எஹலியகொட தேர்தல் தொகுதியின் எஹலியகொட, கிரிஎல்ல மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1000 க்கும் அதிகமானவர்களிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பப் பத்திரங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் ஏற்புடைய பொருட்களை வழங்குவதற்கு விலைமனுக்களை அல்லது கேள்விப் பத்திரங்களை கோரும் பணி இரத்தினபுரி மாவட்ட செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வீடமைப்பு உதவிகளை எதிர்பார்த்துள்ள குறைந்த வருமானம் பெறுநர்கள் மேற்படி உதவித் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் இரத்துச் செய்துள்ளதா என விசாரிக்கின்றனர் என்பதை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அறிவார்களா என்பதையும்;

(ii) இது தொடர்பாக ஏற்புடைய உத்தியோகத்தர்களிடம் விசாரித்து தகவல்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

6041/'15

6.

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி மாதம் நிலவிய விலைக்கு ஒப்பீட்டளவில் தற்போது சாதிக்காவின் விலை 30% - 40% க்கு இடைப்பட்ட அளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சாதிக்காவின் விலை குறைவடைவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) நித்தமும் இடம்பெறுகின்ற சாதிக்காய் விலை வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடும்போது இத்தடவை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் சுமார் 50% ஆல் குறைக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) நிதி ஏற்பாடுகள் குறைக்கப்பட்டுள்ளமையின் காரணமாக ஏற்றுமதிக் கமத்தொழிலுக்கு ஏற்படும் பின்னடைவை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

6043/ '15

7.

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பொது நிருவாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாநகர சபைக்காக புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதன் முதற் கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி முதற் கட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

6048/ '15

8.

கௌரவ சீ.ஏ. சூரியஆரச்சி,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தம்பலகாமம் பிரதேச சபையினால் தொல்பொருளியல் இடங்களை பல்வேறு பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தம்பலாகமம் யுனிட் 17 கொலனியில் காணப்பட்ட தொல்பொருளியல் பெறுமதிமிக்க இரண்டு தாதுகோபுரங்களின் சிதைவுகளை அழித்து சிறுவர் பூங்காவொன்று எவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு எதிராக சட்டம் ஏன் அமுல்படுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) தம்பலகாமம் - திஸ்ஸபுர கிராமத்தின் நிலவரைபட இலக்கம் திரீ 51 மேலதிக இலக்கம் 16 பத்தி இலக்கம் 16 துண்டு இலக்கம் 576 எனும் தொல்பொருளியல் நிலப் பிரதேசத்துக்கு அருகே அமைந்துள்ள மயானத்தை விஸ்தரிப்பதாகக் கூறிக்கொண்டு, அக்காணியை கம்பி வேலி அமைத்து ஒதுக்கிக்கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எந்த அடிப்படையில் எத்தரப்பினரின் தேவையின் அடிப்படையில் இடம்பெறுகின்றது என்பதையும்;

(iv) பிக்குமார் உள்ளிட்ட பிரதேசவாசிகள் எதிர்ப்புத் தெரிவித்த பின்னர் மேற்படி தொல்பொருளியல் காணிகளின் ஊடாக வயல்களுக்குச் செல்வதற்கு இருந்த வீதிக்கு தடை ஏற்படுத்தி வேலி நிர்மாணிக்கப்பட்டுள்ளமை எத்தரப்பினரை பழிவாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிழக்கு மாகாணத்தில் பௌத்த சிதைவுகளை அழிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடமளிப்பதற்கான காரணம் யாது என்பதையும்;

(ii) அவ்வாறான சம்பவங்கள் தொடர்பான விரிவானதொரு விசாரணை யொன்றை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய அல்லது ஊக்குவித்த ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4828/14

9.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை பொது வைத்தியசாலைக்கு தனது முதலாவது நியமனத்தைப் பெற்ற அதன் தலைமை தாதி உத்தியோகத்தரான திருமதி மல்காந்தி டி சில்வா தற்போது அதே வைத்தியசாலையில் இடமாற்றம் ஏதும் இன்றி 21 வருடங்கள் சேவையாற்றியுள்ளார் என்பதையும்,

(ii) மேற்படி தாதி உத்தியோகத்தர் பல சந்தர்ப்பங்களில் இடமாற்றம் கோரியிருந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச தாதிமார் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்குகின்றபோது அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கை யாது;

(ii) மேலே (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இடமாற்றம் கோரியுள்ள போதிலும்கூட, அரச தாதிமார்களுக்கு இடமாற்றம் வழங்கும் கொள்கை திருமதி மல்காந்தி டி சில்வாவுக்கு செல்லுபடியாகாதிருப்பதற்கான காரணம் யாது;

(iii) குறித்த இடமாற்றம் வழங்கும் கொள்கைக்கமைய இவருக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா,

(iv) ஆமெனில், இவருக்கு, இவர் கோருகின்ற இடத்துக்கு இடமாற்றம் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5581/ '14

10.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போதைய ஆயுர்வேத மருத்துவ ஆணையாளரின் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலுவலருக்கு ஆயுர்வேத மருத்துவவியல் தொடர்பாக உள்ள தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரியொருவர் சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சில் அடைந்துகொள்ள முடியுமான உயர் தொழில்சார் பதவி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5944/ '15

11.

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கடற்றொழில் நீரகவள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை, கொட்பேயில் அமைந்துள்ள தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவராண்மை (NARA) நிறுவனத்திற்கு சொந்தமான உத்தியோகத்தர் விடுதி இலங்கை கடற்படையின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திருகோணமலை மற்றும் அதனை அண்டிய பிரசேதங்களில் கடமைப் பணிகளை மேற்கொள்ளும்போது தேசிய நீரக வளமூலங்கள் நிறுவனத்தின் (NARA) ஆராய்ச்சியாளர்களின் பாவனைக்காகப் பெறுவதற்கிருந்த மேலே குறிப்பிடப்பட்ட விடுதியை சிவில் நிருவாகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் கடற்படையின் பொறுப்பில் வைத்திருப்பதற்கான தேவையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விடுதி நாரா நிறுவனத்தினால் மீள சுவீகரிக்கப்படாதா என்பதையும்;

(iii) இவ்வாறு சுவீகரிக்கப்படுமெனில் அத்தேதி யாதென்பதையும்;

(iv) மேற்படி விடுதியை நாரா நிறுவனம் மீள சுவீகரிக்கும் வரை நாரா நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களும், உத்தியோகத்தர்களும் அப்பிரதேசத்தில் கடமை புரியும் போது தங்குமிட வசதியை வழங்குவது எவ்வாறென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6042/ ’15

12.

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் இளைஞர் படையணி மற்றும் தொழில் வழிகாட்டல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக கடந்த வருடம் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பாதியளவு நிறைவடைந்துள்ளது என்பதையும்;

(iii) தற்போதைய அரசினால் மேற்படி கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தின் எதிர்கால சந்ததியினரான பிள்ளைகளின் நலன்கருதி மேலே குறிப்பிட்ட கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6045/ ’15

13.

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்படும் வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளில் திருத்தியமைக்கப்படவுள்ள வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) குறித்த வீதிகளை திருத்தியமைப்பதற்குரிய கருத்திட்டங்கள் இனம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சரவை நிருபங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4829/ '14

14.

கௌரவ புத்திக பதிரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தில், கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், கரகொட உயன்கொட I அத மற்றும் II அத உள்ளிட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமது குடும்பங்களின் பயிர்ச்செய்கை விளைச்சலுக்கு குரங்குகள் மற்றும் மயில்களினால் நேரிடுகின்ற சேதத்தை தடுப்பதற்கு முடியாமல் உள்ளதால் பிரதேச மக்கள் கடும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படும் சேதங்களை தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) இதற்காக எதிர்காலத்தில் கடைப்பிடிக்கவுள்ள முறையியல்கள் யாவை;

(iii) மேற்படி பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் திகதி யாது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5945/ '15

15.

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DODD/HO/2/Admin/நியமனங்கள் ஆம் இலக்க, 2015.02.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. யூ. அநுர எஸ். வீரரத்ன (இலங்கைத் திட்டமிடல் சேவையின் I) திருகோணமலை மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) பின்னர் குறித்த திணைக்களத்தின் பணிப்பாளரின் (நிருவாகம்) DODD/HO/2/Admin/நியமனங்கள் ஆம் இலக்க, 2015.02.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்படி நியமனம் மீண்டும் திருத்தப்பட்டு இவர் அத்திணைக்களத்தின் தலைமையகத்தில், பணிப்பாளர் (சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள்) எனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. வீரரத்னவுக்கு மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவியைப் பெற்றுக்கொடுக்காதிருப்பதற்கு திருகோணமலை மாவட்ட செயலாளரினதும் சமுர்த்தி விடயத்துடன் தொடர்புபடாத அமைச்சர் ஒருவரினதும் அரசியல் தலையீடு நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அத்தகைய தலையீடு நடைபெற்றிருப்பின், அதனை அங்கீகரிக்கின்றாரா என்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்டத்தினுள் சமுர்த்தி விடயத்திற்குரிய நடவடிக்கைகள் காணி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) திருகோணமலை மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் பதவிக்கு திரு. யூ. அநுர எஸ். வீரரத்னவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நீதி அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி மற்றும் தொழில் தொடர்புகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 மாச்சு 17 ஆம் திகதிய 1906/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.32 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.32

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத பண்டகசாலை முற்பணம் - இலங்கை புகையிரத திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 1,700,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 6,102,000,000 இலிருந்து ரூபா. 6,602,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 850,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.33 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.33

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினங்கள் முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு" அளிக்கப்பட்டுள்ள விடயத்துக்காக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 20,000,000 இலிருந்து ரூபா. 25,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 34 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.34

2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனைக்கான (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 2,500,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 1,500,000,000 இலிருந்து ரூபா. 2,250,000,000 வரை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.35 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.35

2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 170,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.36 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.36

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "முடிக்கப்பட்ட வேலை முற்பணக் கணக்கு - அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட இச்சட்டத்தின் உப பிரிவில் உரிய முறையில் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

**அட்டவணை**

**2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

நிதி ஆண்டு 2014 தொடர்பில், 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

**குழுத்தொடர் இலக்கம். 01**

2013 அம் ஆண்டின் இலக்கம் 36 ஐக் கொண்ட 8 வது பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, ரவி கருணாநாயக்க ஆகிய நான் நிதி அமைச்சர் என்ற வகையில் அரச அங்கீகாரத்தின் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடய இலக்கங்களுக்கு அமைவான சட்டத்தின் மூன்றாம் உப பிரிவின் நிரல் இலக்கம் II மற்றும் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச ஒதுக்கீட்டெல்லைகளையும் இலக்கம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் மாற்றியமைக்கின்றேன். 14001, 18201, 10501, 22801, 20801, 27701, 30301, 26901, 27001, 27201, 24201, 28601, 10201, 25601, 25801, 28201, 28501, 11601, 28801, 30601, 27901, 27801, 27401, 27501, 21901, 17801, 12601, 11101, 18801, 21101, மற்றும் 19001.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு | 14001 | 7,000,000 | 10,000,000 | 3,700,000 | 4,000,000 | - | - | 1 |
| 2. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு | 18201 | 5,000,000 | 8,000,000 | 1,100,000 | 4,100,000 | - | - | 2 |
| 3. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 10501 | 140,000,000 | 170,000,000 | 60,000,000 | 90,000,000 | - | - | 3 |
| 4. | நீதி மன்றங்களின் நிர்வாகம் | 22801 | 260,420,000 | 290,420,000 | 170,000,000 | 175,000,000 | 850,000,000 | 1,100,000,000 | 4 |
| 5. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | 9,000,000 | 12,000,000 | - | - | - | - | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாவட்டச் செயலகம், மொனராகலை | 27701 | - | - | 25,000,000 | 24,000,000 | - | - | 6 |
| 7. | புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 30301 | - | - | 3,000,000 | 2,900,000 | - | - | 7 |
| 8. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | 23,000,000 | 18,000,000 | 90,000,000 | 100,000,000 | 8 |
| 9. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, அம்பாறை | 27001 | - | - | 35,000,000 | 30,000,000 | - | - | 9 |
| 10. | மாவட்டச் செயலகம், குருணாகல் | 27201 | - | - | 75,000,000 | 65,000,000 | - | - | 10 |
| 11. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 24201 | - | - | 2,000,000 | 1,700,000 | - | - | 11 |
| 12. | காணி ஆணையாளர் நாயகம் | 28601 | - | - | 12,000,000 | 11,500,000 | - | - | 12 |
| 13. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 10201 | 15,000,000 | 12,000,000 | 9,500,000 | 8,500,000 | - | - | 13 |
| 14. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 56,000,000 | 53,000,000 | - | - | 14 |
| 15. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | 51,000,000 | 46,000,000 | - | - | 15 |
| 16. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | - | - | 100,000,000 | 97,000,000 | - | - | 16 |
| 17. | கமத்தொழில் திணைக்களம் | 28501 | - | - | 150,000,000 | 120,000,000 | - | - | 17 |
| 18. | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 11601 | 6,000,000 | 7,500,000 | - | - | - | - | 18 |
| 19. | நில அளவையாளர் திணைக்களம் | 28801 | - | - | 100,000,000 | 86,000,000 | - | - | 19 |
| 20. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 385,000,000 | 290,000,000 | - | - | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கேகாலை | 27901 | - | - | 30,000,000 | 26,000,000 | - | - | 21 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 38,000,000 | 32,000,000 | - | - | 22 |
| 23. | மாவட்டச் செயலகம், அநுராதபுரம் | 27401 | - | - | 40,000,000 | 35,000,000 | - | - | 23 |
| 24. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை | 27501 | - | - | 18,000,000 | 15,000,000 | - | - | 24 |
| 25. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 21901 | 8,000,000 | 8,011,000 | - | - | - | - | 25 |
| 26. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 17801 | 4,000,000 | 5,000,000 | - | - | - | - | 26 |
| 27. | கல்வி அமைச்சு | 12601 | - | - | 680,000,000 | 675,000,000 | - | - | 27 |
| 28. | சுகாதார அமைச்சு | 11101 | - | - | 710,000,000 | 653,000,000 | - | - | 28 |
| 29. | தாவரவியல் பூங்கா மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு | 18801 | 2,000,000 | 2,060,110 | - | - | - | - | 29 |
| 30. | அரசாங்க அச்சாளர் திணைக்கம் | 21101 | - | - | 45,000,000 | 44,000,000 | - | - | 30 |
| 31. | சட்டமும் ஒழுங்கும் அமைச்சு | 19001 | - | - | 83,000,000 | 60,000,000 | - | - | 31 |
| | மொத்தம் | | 456,420,000 | 524,991,110 | 2,905,300,000 | 2,666,700,000 | 940,000,000 | 1,200,000,000 | |

2015 ஏப்பிரல் 10 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம்: ரவி கருணாநாயக்க
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2015 சனவரி 29 ஆந் திகதிய 1899/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2015 பெப்புருவரி 26ஆந் திகதிய 1903/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 02 ஆந் திகதிய 1891/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 12 ஆந் திகதிய 1892/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதிய 1895/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 சனவரி 22 ஆந் திகதிய 1898/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 சனவரி 29 ஆந் திகதிய 1899/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி 14 ஆந் திகதிய 1901/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி 24 ஆந் திகதிய 1903/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 மாச்சு 17 ஆந் திகதிய 1906/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 27.

நிதி அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 28.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.04.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 29.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2015.04.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 30.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 31.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 32.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 33.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 34.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 35.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 36.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 37.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

39.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

40.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

41.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

42.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.